**தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்ற, தேறிய சொத்து மாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் மூலம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினைவழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது ஆத எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் காள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்தில் உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் அதிகாரசபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கட்டுப்பாட்டுச் சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க, அதிகாரசபை செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 24(அ) பந்தி பிரகாரம் நிறுவனத்தினால் பாதீட்டிலான எண்ணிக்கை மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைகளை வெவ்வேறாக எடுத்துக் காட்டும் வகையில் நிதிக்கூற்றுக்கள் சமர்பிக்க வேண்டிய போதும் மீளாய்வாண்டிற்கு உரியதாக சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் பாதீட்டு வருமானம் | 2022 ஆண்டு முதல் மதிபிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகளை நிதிக்கூற்றுக்களில் எடுத்துக் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | நியமத்தின் ஆலோசனை பிரகாரம் பாதீட்டு ரீதியான எண்ணிக்கை மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைகளை வெவ்வேறாக எடுத்துக் காட்டி நிதிக்கூற்றுக்கள் சமர்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் வருமான முறன்களை குறிப்பிட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | திரண்ட மிகையுடன் செம்மையாக்கிய கடந்த ஆண்டு செம்மையாக்கம் ரூபா 1,474,281 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப் பாயச்சலுடன் செம்மையாக்கப்பட்டு இருந்தமை, 03 மாதங்களுடன் முதிர்ச்சியடையும் ரூபா 376,499,131 ஆன 20 நிலையான வைப்புக்கள், ரூபா 11,237,375 ஆன 06 திறைசேரி முறிகள் மற்றும் ரூபா 71,963,410 ஆன 03 சேமிப்பு கணக்குகளின் பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகளாக குறிப்பிடாது முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டியிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சல் கூற்று இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் ஏற்பாடுகளிற்கு இணங்க தயாரிக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | இத் தவறை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்க வேண்டும். |
| (இ) | முழுமையாக தேய்விடப்பட்ட ரூபா 88,827,013 கிரயமான இரசாயன கூட உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தற்போதும் பயன்படுத்தப்பட்ட போதும் இச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட் காலம் தொடர்பான மதிப்பீட்டுத் தவறை இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 பிரகாரம் மீள் பரிசீலனை செய்து நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீள்மதிப்பீடு செய்படாத சொத்துக்களை மதிப்பீடு செய்ய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. 2022 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கப்படவுள்ளன. | நியமத்தின் ஆலோசனை பிரகாரம் முழுமையாக தேய்விடப்பட்ட போதும் பயன்படுத்தப்படும் சொத்துக்களின் பயனுள்ள ஆயட்காலத்தை மீண்டும் மீளாய்வு செய்து நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 69 பந்தி பிரகாரம் சொத்துக்களை பயன்படுத்துவதன் நோக்கத்திலான செயற்பாடுகளிற்கு பயன்படுத்துவதற்கு ஆரம்பிக்கும் போது அச்சொத்துகளிற்கு தேய்மானமிட ஆரப்பிக்க வேண்டிய போதும், 2011 இற்கும் 2018 இற்குமிடையிலான காலத்தினுள் கொள்வனவு செய்து எதிர்பார்த்த நோக்கத்திற்கு பயன்படுத்தியிருக்காத HPLC உபகரணங்கள் உள்ளிட்ட கிரயம் ரூபா 17,714,910 ஆன 12 | அதிகார சபையின் கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் இச் சொத்துக்களை கொள்வனவு செய்த ஆண்டு முதல் வருடாந்தம் 20 சதவீதப் படி தேய்மானம் செய்யப்பட்டுள்ளது. | நியமத்தின் ஆலோசனை பிரகாரம் சொத்தொன்றை பயன்படுத்த நோக்காகக் கொண்ட செயற்பாட்டிற்காக பயன்படுத்த ஆரம்பிக்கும் போது அச் சொத்துக்களிற்கு தேய்விட ஆரம்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் கொள்வனவு செய்த ஆண்டு முதல் 20 சதவீதப் படி தேய்விடப்பட்டிருந்தன. இதன் காரணமாக மீளாய்வாண்டு இறுதியில் பயன்பாட்டிற்கு எடுக்காத 08 இயந்திரங்களின் பெறுமானங்கள் இல்லாதிருந்ததுடன் சொத்துக்கள் மற்றும் திரண்ட மிகை ரூபா 12,577,364 வீதம் குறைத்தும், செலவினம் ரூபா 3,205,365 தொகை கூடுதலாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டிப்பட்டன. | | |
| (உ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 10 இன் 33 பந்தி பிரகாரம் கொடுக்கல் வாங்கல் மற்றும் அன்மித்த பொருளாதார நலன்கள் அல்லது சேவைகளின் சாத்தியப்பாடு நிறுவனத்திற்குள் விரைந்து உள்வருவதற்கான சாத்தியமொன்று காணப்படுகின்ற போது மற்றும் செலவினங்களின் அளவுகளை நம்பகமாக அளக்க இயலுமாக காணப்படுகின்ற போது அவற்றை வட்டி வருமானமாக இனங்காண வேண்டிய போதும், 36 ஆண்டுகளாக அறவிடப்படாத பீ.சீ.சீ. இலங்கை கம்பனியின் ரூபா 26,715,037 தொகையான கடன் மீதிகளிற்காக ஆண்டுதோறும் ரூபா 4,011,,609 வீதம் வட்டி வருமானமாக கணக்கிட்டு அப் பெறுமதியை ஐயக்கடனாக ஒதுக்கியிருந்தது. இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தவும், கடன் மீதிகளிற்கான இழப்பீட்டுப் பெறுமதிக்காக தேவையான செம்மையாக்க மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இக் கடன் மற்றும் வட்டித் தொகையை பீ.சீ.சீ. இலங்கை கம்பனியினால் தெங்கு அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்துவதாக தொடர்ந்தும் திறைசேரி ஊடாக அறியத் தந்துள்ளதால் தேவையான செம்மையாக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | அறவிடப்படாத கடன் மற்றும் வட்டி வருமானம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தவும், கடன் மீதிக்கான இழப்பீட்டுத் தொகைக்கு தேவாயன செம்மையாக்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுமதியற்றதாக நிலையான சொத்து பதிவேட்டிற்கு உட்படுத்தியிருந்த துன்கன்னாவ தும்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சி மத்திய நிலையத்தில் காணப்படும் 16 இயந்திரங்கள், 17 கணனி மற்றும் உதிரிப்பாகங்கள், 04 தளவாடங்கள் மற்றும் 65 ஏனைய சொத்துக்களை மதிப்பிட்டு கணக்குகளில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேட்டிற்கு 2022 ஆண்டில் நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த நிலையான சொத்துக்களை மதிப்பிட்டு நிலையான சொத்து பதிவேட்டிற்கு செம்மையாக்கி கணக்குகளில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அதிகார சபையினால் 2021 திசெம்பர் 31 திகதிக்கு காகிதாதிகள் மற்றும் ஏனைய நுகர்வுப் பண்டங்கள் தொடர்பாக பௌதீக இருப்புக் கணிப்பீடொன்றை செய்திருந்த போதும் அவ்வறிக்கையில் உள்ளடங்கிய இருப்பு அதிகார சபையின் கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் முதல் கிடைப்பனவு முதல் விநியோகம் (FIFO) முறையிற்கு பெறுமானமிட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய இருப்பு பிரகாரம் மீதியான ரூபா 21,501,463 இனது சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள முடியவில்லை. | பௌதீக இருப்பு கணிப்பீட்டு அறிக்கை 2022.02.28 திகதியளவில் விநியோகிக்கப்பட்டு இருக்காததால் இருப்பு பேரேட்டு மீதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | பௌதீக இருப்பு மீள்மதிப்பீட்டு மீதிகளின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பிரதான அலுவலக களஞ்சிய இருப்பிலிருந்து அகற்றி குறித்த பிரவுகளிற்கு விநியோகிக்கப்பட்ட ரூபா 2,962,845 பெறுமதியான 1,649,010 இஸ்டிகர்கள் மற்றும் 105 வகைகளிற்குரிய ரூபா 8,427,201 பெறுமதியான இரசாயன பொருட்கள், கண்ணாடி உபகரணங்கள் மற்றும் ஊடக உபகரணங்களின் இருப்புக்கள் 2021 திசெம்பர் 31 திகதியன்று அப் பிரிவுகளில் எஞ்சியிருந்த போதும் அவற்றை பௌதீக ரீதியாக கணிப்பிட்டு இருப்பிற்கு செம்மையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக ரூபா 11,390,046 இனால் நிதிக்கூற்றுக்களில் உள்ள இருப்பு குறைவாகவும், செலவினம் கூடுதலாகவும் நிதிக்கூற்றுக்ளில் காட்டப்பட்டன. | இவ் இருப்பை எதிர்காலத்தில் முறையான ஆவணப்படுத்தலினால் முகாமை செய்ய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் இவ்வாறு களஞ்சியத்திலிருந்து ஒரே முறையில் துணை இருப்புக்களை வழங்குவதை மட்டுப்படுதுமாறும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் இருப்பு குறைதல் ஏற்படாமலும், இவ் இருப்பை பௌதீக ரீதியாக கணிப்பீடு செய்து இருப்புடன் செம்மையாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிறுதியில் அனைத்து எஞ்சிய இருப்புக்களையும் பௌதீக ரீதியாக கணிப்பிட்டு இருப்பிற்கு உள்ளடக்க வேண்டும். |
| (ஈ) | 11 இரசாயன வகைகள் பல குறியீடுகளின் கீழ் களஞ்சியத் தரவுத் தொகுதியிற்கு உள்ளீடு செய்துள்ளதாக களஞ்சிய பெரேட்டுக் கணக்கு மற்றும் பௌதீக இருப்பு கணிப்பீட்டு அறிக்கை மாதிரிப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதில் அவ் இரசான பண்டங்களின் இருப்பு கிடைப்பனவு மற்றும் விநியோகம் சரியாக கணக்கீடு செய்யப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | குழுவொன்றை நியமித்து குறியீடு தொடர்பாக நிலவிய சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒரு இரசாயன வகைக்கு ஒரு குறியீடு வீதம் வகையான தரவுத் தொகுதியொன்றை தயாரித்துக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | திசிந்தி தெங்கு ஆலை உரிமையாளர்களுக்கு சேவை வழங்க மற்றும் பணம் அறவிட இன்வொஸ் விநியோகித்திருக்காமை, கடன்படுனர் பேரேடு மற்றும் கடன்படுனர் கட்டுப்பாட்டுக் கணக்கு பேணியிருக்காமை, பண அறவீட்டிற்கான முறைமையொன்றை அறிமுகஞ் செய்திருக்காமை, வங்கியிற்கு நேரடியாக வைப்புச் செய்யும் பணத்தை இனங்காணும் தகவல் தொழிநுட்ப முறையொன்று இல்லாமை போன்ற விடயங்களினால் விற்பனை மற்றும் கடன்படுனர் தொடர்பாக முறையான உள்ளக கட்டுப்பாடொன்று இருப்பதாக, கடன்படுனர்கள் மற்றும் வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்துள்ளதாகவும் கணக்காய்வின் போது திருப்தி அடைய முடியவில்லை. மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் அவ் வருமானம் ரூபா 11,057,590 தொயையும், கடன்படுனர் மீதி ரூபா 5,104,468 தொகையுமானதுடன் வருமானம் சேகரிக்கும் பிரிவினால் நடாத்திச் செல்லப்படும் பதிவேடு பிரகாரம் அவ் வருமானம் ரூபா 9,794,902 தொகையும், கடன்படுனர் மீதி ரூபா 4,377,852 தொகையுமாகும். | இன்வொஸ் பிரதிகள் கணக்கு பிரிவிற்கு உரிய முறையில் கிடைக்காததன் மீது இத் தவறு மற்றும் குறைபாடு இடம்பெற்றுள்ளதுடன் அவற்றை சரிசெய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திசிதி தெங்கு ஆலை உரிமையாளர்களுக்கு சேவை வழங்கும் சந்தர்ப்பத்தில் இன்வொஸ் பத்திரத்திற்குரிய கொடுப்பனவு பிரதியுடன் மாதிரி பெறப்பட்டு தரவுத் தொகுதிக்கு உள்ளீடு செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக அதிக கவனம் செலுத்துவதாகவும் நிலுவை கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும் அறவிக்கிறேன். | விற்பனை மற்றும் கடன்படுனர் தொடர்பாக முறையான உள்ளக கட்டுப்பாடொன்றை ஏற்படுத்தி கடன்படுனர் மற்றும் வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | நிதிக்கூற்றுக்களில் “Receipt In Advance” என நடைமுறை பொறுப்பின் கீழ் காணப்படும் ரூபா 2,391,232 ஆன இனங்காணப்படாத மீதிக்கிடையில் முறையே ரூபா 335,750 தொகை, ரூபா 460,627 தொகை மற்றும் ரூபா 912,000 தொகையுமாக ரூபா 1,708,377 கூட்டுத் தொகை 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளிற்குரிய வாடிக்கையாளர்களினால் நேரடியாக வங்கியில் வைப்புச் செய்த பரிசோதனை கட்டணம் மற்றும் பதிவுக் கட்டண வருமானமென அவதானிக்கப்பட்டது. அவ்வாறாயினும் இம் மீதிகளை சரியாக நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கி இருக்காத காரணத்தால் ரூபா 1,708,377 இனால் நடைமுறை பொறுப்புக்கள் | சில வாடிக்கையாளர்களினால் வங்கியிற்கு செய்த நேரடி வைப்பு தொடர்பான எவ்வித தகவலும் சமர்பிக்கப்படாமை அல்லது கவனிக்கத்தக்க காலமொன்று செல்லும் வரை அனுப்பாமை இதற்கு காரணமாகும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் இடம்பெறாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி இம் மீதிகளை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். வங்கிற்கு செலவாகும் மீதிகளை மாதாந்தம் இனங்காணும் முறைமையொன்றை நிறுவ வேண்டும். |

கூடுதலாக காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 460,627 இனால், திரண்ட மிகை ரூபா 335,750 இனால் மற்றும் முற்பெறுவனவு ரூபா 912,000 இனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டன.

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | கடன்கொடுனர் 20 பேர்களுக்கு செலுத்தவேண்டிய தொகை | 70,527,249 | மீதி உறுதிப்பாடுகள் | அனைத்து கடன்கொடுனர்களுக்கும் மீதிகளை உறுதிப்படுத்துமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | மீதிகளை உறுதிப்படுத்துவதனூடாக கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர்களின் தொடர்ந்திருத்தலை உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | கடன்படுனர் 92 பேர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகை | 15,236,329 | மீதி உறுதிப்பாடுகள் | | |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேங்காய் எண்ணெய் விலை நிர்ணய நிதியத்திலிருந்து மற்றும் மூலதன அபிவிருத்தி நிதியத்திலிருந்து B.C.C இலங்கை கம்பனிக்கு 1985 ஆம் ஆண்டின் போது வழங்கியிருந்த கடன் ரூபா 26,715,037 தொகை மற்றும் 2002 மற்றும் 2004 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட கடன் ரூபா 31,550,000 மற்றும் அதற்குரிய வட்டித் தொகை ரூபா 56,162,526 ஆக கூட்டுத் தொகை ரூபா 114,427,563 தொகையினை 36 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலுவையாக உள்ளதுடன் அறவிடுவதற்கு செயற்திறனாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க | பீ.சீ.சீ. இலங்கை கம்பனியினால் பயன்படுத்தப்படும் காணியொன்றை நீதி அமைச்சிற்கு ஒப்படைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளும் இழப்பீட்டுத் தொகையிலிருந்து அக்கடன் மற்றும் வட்டித் தொகையை தீர்க்க 2022 சனவரி 26 திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் இடமபெற்ற கலந்துரையாடலில் உடன்பட்டுள்ளனர். | தாமதமின்றி அறவிட வேண்டிய கடன் மற்றும் வட்டியை அறவிட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் திசிந்தி தெங்கு மாதிரி பரிசோதனைகளை மேற்கொண்டு சான்றிதழி வழங்கியிருந்த 33 ஆலை உரிமையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,321,138 தொகை, திசிந்தி உற்பத்திக்காக பதிவுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத 15 ஆலைகளிலிருந்து அறவிட வேண்டியுள்ள ரூபா 1,119,599 தொகை மற்றும் 13 தேங்காய் பால் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 145,144 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | இத் தொகையை நேரடி வைப்பின் மூலம் செலுத்தியுள்ளதாக குறித்த நிறுவனங்கினால் குறிப்பிட்டுள்ளதுடன் அது தொடர்பாக பரிசோதித்து பணம் செலுத்தல் இடம்பெறவில்லை எனில், அத் தொகையை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிட வேண்டிய தொகையை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், பரிசோதிக்க முன்னர் குறித்த கட்டணத்தை பெற்றுக் கொள்ள முறைமையொன்றை தயாரிக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் எனபவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 இலக்க நிதிச் சட்டத்தின் 11(ஆ) பரிவு, 2004 ஜூன் 29 திகதிய 25 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2006 ஜூன் 27 இலக்கம் PE/PE/9 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை | அரச யாகங்களின் பணத்தை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்ய நிதியமைச்சின் இணக்கப்பாடு மற்றும் குறித்த அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும், அதிகார சபையின் 2021 திசெம்பர் 31 திகதியன்று 40 நிலையான வைப்புக்களின் முதலீடு ரூபா 739,847,663 தொகைக்காக அவ்வாறு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | இதன் பின்னர் ஏதேனும் முதலீடுகளை செய்ய நடவடிக்கை எடுக்க முன்னர் குறித்த இணக்கப்பாட்டை மற்றும் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலையான வைப்புக்களில் முதலீடு செய்ய நிதியமைச்சின் இணக்கப்பாடு மற்றும் குறித்த அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன வதிக்கோவையின் 11 அத்தியாயத்தின் 13.3 மற்றும் 13.7 பந்தி | வெற்றிடமானவுள்ள பதவி ஒன்றிற்காக முழுநேர அலுவலர் ஒருவரை தாமதமின்றி நியமிக்க வேண்டியதுடன், கடமை காப்பு செய்யும் போது அவ் அலுவலரிற்கு மேலதிக படியொன்றை பெற்றுக் கொள்ள உரிமையில்லை. அவ்வாறாயினும், அதிகார சபையின் பணிப்பாளர் (நிர்வாகம்) உள்ளிட்ட 03 பதவிகளில் கடமை காப்பிற்காக 03 அலுவலர்களை 02 ஆண்டுகள் 03 மாதங்கள், 02 | 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் நடந்த தேர்தல்கள் காரணமாக ஆடசேர்ப்பு இடைநிறுத்தப்பட்டமை ம, பின்னர் தகுதியான விண்ணப்தார்கள் இல்லாதிருந்தமை காரணமாக ஆட்சேர்க்க முடியாது போனது. தற்போது ஆட்சேர்ப்பு திட்டதை திருத்த | சட்டரீதியற்ற கொடுப்பனவை இடைநிறுத்தல் மற்றும் செலுத்திய சட்டரீதியற்ற பணத்தை அறவிடல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருடங்கள் 08 மாதங்கள் மற்றும் 03 வருடங்கள் 04 மாதங்கள் முதல் நியமித்து அதற்காக மாதாந்தம் ரூபா 29,201 தொகை வீதம் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 924,220 தொகை படிகளாக செலுத்தப்பட்டுள்ளது. | அனுப்பப்பட்டுள்ளது. இம் 03 பதவிகளிற்காக கடமை காப்புச் செய்தலை கடமை மேற்கொள்ளல் என சரிசெய்து படிகளை செலுத்த அல்லது அவ்வாறு இல்லையெனில் பணத்தை மீள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். கொடுப்பனவை இடைநிறுத்த அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி.371 | பெற்றுக் கொண்ட உப கட்டுநிதி குறித்த நடவடிக்கை முடிவடைந்தவுடனே தீர்க்க வேண்டிய போதும், 18 சந்தர்ப்பங்களில் 15 அலுவலர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 801,990 முற்பணத்தை தீர்க்க 30 நாட்கள் முதல் 246 நாட்களிற்கிடையிலான காலமொன்று கடந்திருந்தது. | கொவிட் தொற்று காரணமாக முற்பண தீர்ப்பனவு தாமதமாகியுள்ளது. எதிர்காலத்தில உடனடியாக முற்பணத்தை தீர்க்க வேண்டுமென அலுவலர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர். | பெற்றுக் கொண்ட உப கட்டுநிதியை நடவடிக்கை முடிவடைந்தவுடனே தீர்க்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 18,945,738 பற்றாக்குயையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 18,194,029 ஆகும். அதன் பிராகரம் நிதி விளைவுகளில் ரூபா 37,139,767 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மொத்த செலவினம் ரூபா 24,561,068 ஆல் வீழ்ச்சியடைந்து இருந்த போதும், வருமானம் ரூபா 56,527,308 ஆல் குறைவடைந்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாரஹேட்பிட பிரதான அலுவலகத்தில் 2019 ஆண்டில் ரூபா 4,092,743 செலுத்தி மேற்கொண்ட மின்சார திருத்த வேலைகள் உரிய முறைப்படி செய்யப்படாத காரணத்தால் அதற்காக மீண்டும் 2021 ஆண்டில் ரூபா 1,400,200 தொகை செலவிட நேரிட்டிருந்தது. | நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வை, மதியுரை சேவைகள் மற்றும் பரிந்துரையின் மீது தேவையான மின் கொள்ளளவை 300KVA | 2019 இல் மேற்கொண்ட பழுதுபார்த்தலில் குறைபாடு காணப்பட்டதா என்பது தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | | வரை அதிகரக்க உள்ளக மின் கம்பிகள் மற்றும் மின் சுற்றுப் பலகையை பழுதுபார்த்தல், புதிய மின் சுற்றுப் பலகை பொறுத்துதல், இரசாயனகூட உபகரணங்களை நிலைப்படுத்தல் பிரகாரம் புதிய மின் மாணி பொறுத்துதல் மேற்கொண்டு கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பரிசோதனை ஒன்று மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | தென்னை சார்ந்த உற்பத்திகள் தொடர்பாக அதிகார சபைக்கு ஒப்படைத்துள்ள மேற்பார்வை மற்றும் ஒழுங்கமைக்கும் செயற்பாடுகளை முறையாக்குவதற்காக கைத்தொழிலாளர்களுக்கு தொடர் இலக்கத்துடன் இஸ்டிகர் வகையிலான லேபல் முறையொன்றை அறிமுகம் செய்யும நோக்கில் தேவைப்பாட்டை இனங்காணாது 2016 இற்கும் 2018 இற்குமிடையிலான காலத்தினுள் ரூபா 11,626,311 செலவிட்டு 07 வகைகளின் கீழ் பிரசுரிக்கப்பட்ட இஸ்டிகர் 6,573,831 இல் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 8,358,002 பெறுமதியான 72 சதவீதமான இஸ்டிகர் 4,725,841 எஞ்சியிருந்ததுடன் இஸ்டிகர் கொள்வனவிற்காக கைதொழிலாளர்களின் ஆர்வம் குறைந்து காணப்பட்டதால் அவ் எஞ்சிய இருப்பு சிக்கனமற்ற செலவொன்றாக முடியுமென அவதானிக்கப்பட்டது. மேலும், பிரசுரிக்கப்பட்ட மொத்த இஸ்டிகர் 6,573,831 இல் விற்பனை செய்த அளவு 1,732,879 ஆனதில் 2021 திசெம்பர் 31 திகதியன்று களஞ்சியத்தில் எஞ்சியிருக்க வேண்டிய இஸ்டிகர் அளவு 4,840,952 ஆக வேண்டிய போதும், எஞ்சியுள்ள இஸ்டிகர் அளவு 4,725,841 ஆனதில் விற்பனை பெறுமதி ரூபா 230,222 தொகையான இஸ்டிகர் 115,111 களின் பற்றாக்குறை காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | தேங்காய் விலை ஏற்ற இறக்கம் மற்றும் போட்டி சர்வதேச சந்தை காரணமாக, சில கைத்தொழில் நிறுவனங்கள் செயலிழந்த நிலைக்கு உள்ளாதல், உற்பத்தி குறைவடைதல் மற்றும் கொவிட் தொற்று நிலைமை காரணமாக எதிர்பார்த்தவாறு லேபர்களை கைத்தொழிலாளர்களுக்கு வழங்க முடியவில்லை. எவ்வாறாயினும் படிப்படியாக இக் கைத்தொழிலுடன் ஒத்ததாக்குதல் அதிகார சபையின் நோக்கமாகும். | தேவைப்பாடுகளை இனங்கண்டு வழங்கவும், அதனை வினைத்திறனாக பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இஸ்டிகர் பற்றாக்குறை தொடர்பாக பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.9இ |
| (இ) | தெங்கு உற்பத்திகளில் உள்ளங்கும் சீனி அளவு, விட்டமின் அளவு, கழிவு அளவுகளை (PAH) பரிசோதித்தல், ஏற்றுமதி செய்யப்படும் திசிந்தி தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய்யில் SLS 98:2013 கொண்ட இலங்கை தரநிர்ணயத்திற்கு அமைய நிலவும் | இந்த HPLC உபகரணம் 2017 ஆண்டு கொள்வனவு செய்த திகதி முதல் 2020 வரை பரிசோதனைகளுக்கு பயன்படுத்த முடியாமைக்கு இரசாயனகூட | இயந்திரத்தை கொள்வனவு செய்ய முன்னர் அதற்காக தேவையான உட்கட்டமைப்பு மற்றும் பயிற்றப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | எப்லடொக்சின் பரிசோதனை செய்தலையும் நோக்காகக் கொண்டு 2017 ஆண்டில் ரூபா 6,590,685 இற்கு கொள்வனவு செய்த High Performance Liquid Chromo to Graph (HPLC) இயந்திரத்திற்காக 2019 மற்றும் 2021 ஆண்டுகளில் மேலும் ரூபா 9,107,192 செலவிட்டு மேலதிக உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்திருந்த போதும் கொள்வனவு செய்த திகதி முதல் குறைபாடுகள் அறிக்கையிடப்பட்டுள்ளமை மற்றும் இரசாயனகூட நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்திருக்காத போதும் இயந்திரத்தை கொள்வனவு செய்தல் மற்றும் பகுப்பாய்வு ஊழியர் வெற்றிடங்கள் காணப்படுவது போன்ற விடயங்களின் மீது இயந்திரம் செயற்படாது இருந்ததுடன் 2018 ஆண்டில் இயந்திரத்தின் உத்தரவாத காலமும் முடிவடைந்திருந்தது. மேலும், தொழிநுட்ப அறிவுடன் கூடிய சுவந்திரமான அலுவலர் ஒருவர் மூலம் இயந்திரத்தை பரிசோதிக்ககாது அனைத்து கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் 3 ஆண்டுகள் வரை பூர்த்தி செய்யாமை மற்றும் 2019 – 2021 வரை பகுபாய்வாளர் ஊழியர் வெற்றிடங்கள் நிலவியமை காரணமானது. 2022/07/15 திகதியளவில் 42 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொரோனா தொற்று மற்றும் எரிபொருள் மற்றும் மின்சாரம் வழங்குவதன் நெருக்கடி, இரசாயன பண்டங்களின் இறக்குமதிக்காக அன்னிய செலாவணி பற்றாக்குறை காரணமாக முக்கியமான பரிசோதனைகள் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றது. | ஆளணி உள்ளதா என உறுதி செய்து கொள்ளாததால் அதற்கு பொறுப்புவாய்ந்தவர்களை இனங்காண பரிசோதனை ஒன்றை மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | சனாதிபதி பதிவியேற்பு இரண்டாம் வருட பூர்த்தியிற்கு பாராட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்றை வடிவமைக்க ரூபா 75,600 தொகை செலவிட்டமை, வரிசை இராஜாங்க அமைச்சினால் அச்சிட்டு ‘‘அபோக்ஷா கப்ருக’’ எனும் புத்தகத்தின் 150,000 பிரதிகளை அச்சிட ரூபா 8,181,000 கொடுப்பனவு செய்தமை அதிகார சபையின் நோக்கத்திற்கு மாற்றமானது என அவதானிக்கப்பட்டது. | விடய பொறுப்பு அமைச்சினால் தென்னை பயிரிடல் மற்றும் தெங்கு கைத்தொழிற்துறை தொடர்பாக பொது மக்கள் அறவூட்டப்பட்டுள்ளனர். | அதிகார சபையின் நோக்கத்திற்கு இணங்காத செலவுகளை செய்யக் கூடாது. விடய பொறுப்பு அமைச்சின் செலவுகள் அவ்வமைச்சிற்கு ஒதுக்கியுள்ள ஏற்பாடடிலிருந்து மேற்கொள்ள வேண்டும். |
| (உ) | அதிகார சபையின் நாரஹேன்பிட்ட பிரதான அலுவலகத்தின் முன்பக்கமாக தலைவரிற்கு ஒரு பகுதியை சேர்த்தல் மற்றும் கொழும்பு கோட்டையில் நடாத்திச் செல்லப்படும் அலுவலகத்தில் விற்பனை நிலையமொன்றை அமைக்க ஏற்பாடு இல்லாதிருக்கையில் அதற்கான திட்டத்தை தயாரிக்க இணங்கியிருந்த ரூபா 1,200,000 தொகையான மதியுரை கட்டணத்தின் முதலாம் தவணையாக தனியார் மதியுரை நிறுவனமொன்றிற்கு செலுத்தியிருந்த ரூபா 300,000 தொகை அக் கருத்திட்டத்திற்காக திறைசேரியின் அங்கீகாரம் வழங்கப்படாததால் குறித்த நிர்மாணத்தை மேற்கொள்ள முடியாதிருந்தது. | 2023 ஆண்டு செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கி அதிகார சபையின் உள்ளக வருமானமீட்டல் அல்லது உள்ளக சேமிப்பை பயன்படுத்தி இச் செயற்பாட்டை மேற்கொள்ளவுள்ளது. இதனை விசேட முதலீட்டு கருத்திட்டமொன்றாக தனியார் துறையினரின் உதவியுடன் நடாத்திச் செல்ல முன்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | இச் செயற்பாட்டை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். அதனை செய்ய முடியவில்லை எனின் செலவுவை பொறுப்புவாய்ந்தவர்களிடமிருந்து அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | தெங்கு சார்ந்த உற்பத்தி தொடர்பாக கேள்வியாளர்களினால் அனுப்பும் திசிந்தி தேங்காய், தேங்காய் எண்ணெய், தும்புசோறு, நீர், திசிந்தி தேங்காய, புன்னாக்கு, கொப்பரா, தேங்காய் போன்றவற்றின் மாதிரிகளின் பரிசோதனைகளை மேற்கொண்டு அதிகார சபையின் இரசாயனகூடத்தின் மூலம் 05 நாட்களிற்கும் 10 நாட்களிற்குமிடையிலான காலத்தினுள் பரிசோதனை அறிக்கை வழங்க வேண்டிய போதும், மீளாய்வாண்டில் 60 பரிசோதனை அறிக்கைகள் 14 நாட்களும் 118 நாட்களும தாமதித்து வழங்கியிருந்ததுடன் பரிசோதனை அறிக்கை பதிவேட்டை நாளாதுவரையாக பேணியிருக்கவில்லை. | கொவிட் தொற்று காரணமாக ஊழயர் பற்றாக்குறை ஏற்பட்டதன் மீது இரசாயனகூடத்திற்கு அனுப்பப்படும் மாதிரிகளிற்கு முக்கியத்துவத்தின் அடிப்படையில இடம் கிடைக்கும் வகையில் இடம்பெறுகிறது. முக்கிய பரிசோதனைகள் மேற்கொள்ளும் அதே நேரம் ஒழுங்குமுறையான பரிசோதனைகளையும் மேற்கொள்ள வேண்டியதால் பரிசோதனை பெருபேறுகளை வழங்குதல் தாமதமாகியுள்ளது. எதிர்காலத்தில் இந் நிலைமையை தவிர்த்துக் கொள்ள நிலைமை கட்டுப்பாட்டுப் பிரிவின் வருடாந்த திட்டத்திற்குரியதாக ஒழுங்குமுறையான மாதிரிகளை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய தினத்திற்கு பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை வழங்கவும், அறிக்கை பதிவேட்டை நாளாதுவரையாக நடாத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | சேவையை விட்டுச் சென்றி இரண்டு ஊழியர்களுக்கு 2017 மற்றும் 2020 ஆண்டுகளில் வழங்கியிருந்த ரூபா 434,938 ஆன ஊழியர் கடன் தொகையை அறவிட தேவையான நடவக்கை எடுத்திருக்கவில்லை. | நாட்டில் காணப்படும் நெருக்கடியின் முன் தாமதித்த போதும் சலுகை காலமொன்றை பெற்று மேற்குறிப்பிட்ட கடன் தொகையை கடன்தாரரிடமிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஊழியர் கடன் தொகையை அறவிட தேவையான செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டு இறுதியில் பண்டக கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் ஒரு பிரிவில் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் 08 இனது பற்றாக்குறையும், இன்னுமொரு பிரிவில் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் 07 இனது மிகையும் காணப்பட்ட போதும் அது தொடர்பாக பரிசோதித்து உரிய சீராக்கம் செய்திருக்கவில்லை. | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பத்தில் இக் கணக்கிடலின் சரியான தன்மையை மீள் பரிசோதனை செய்து குறித்த செம்மையாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | வெளிப்படுத்தப்பட்ட பற்றாக்குறை மற்றும் மிகைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் விசாரணை நடாத்தி தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |

**3.2 சர்ச்சை தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தெங்கு உற்பத்திகளை நுகர்வோர்களிற்கு இடையில் பிரபள்ளியப்படுத்தும் வேலைத் திட்டத்திற்காக 2014 ஆண்டில் இலங்கை ரூபவாஹிணி கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 9,344,832 செலுத்தியிருந்த போதும், பிரசார நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத காரணத்தால் மீள் செலுத்த வேண்டிய ரூபா 7,060,032 ஆன தொகையை மீளாய்வாண்டு இறுதிவரையும் அறவிட முடியாதிருந்தமை சர்ச்சைகுரிய விடயமொன்றானதுடன் இப் பிரசார கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது நிதி மோசடியொன்று ஏற்பட்டுள்ளதாக இலஞ்சம் அல்லது ஊழல் முறைப்பாட்டு ஆணைக்குழு மற்றும் சனாதிபதி பலனாய்வு அலகினால் 2016 ஆண்டில் மேற்கொண்ட புலனாய்வுகளின் முன்னேற்றம் தொடர்பாகவும் கண்டறிந்திருக்கவில்லை. செலவிட்ட ரூபா 2,284,800 தொகையில் ரூபா 2,280,000 தொகை 06 பிரசார தட்டுகளை உற்பத்தி செய்வதற்கான போதும், அப் பிரசார தட்டுகள் ஒலிபரப்பப்படாததால் அத் தொகையும் சிக்கனமற்ற செலவொன்றாக இருந்தது. | இத் தொகையை அறவிட தொடரந்தும் நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்கொண்ட விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பாக கண்டறிந்து தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறமையின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 1971 இலக்கம் 46 கொண்ட தெங்கு அபிவிருத்தி சட்டம் பிரகாரம் ''திசிந்தி'' தேங்காய் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கில், ஏற்றுமதி செய்யும் ஒவ்வொறு திசிந்தி தேங்காய் கி.கி 1 இற்காகவும் 20 சதம் வீதம் செஸ் நிதியத்தினால் கிடைக்கும் பணத்தை அந்த அந்த ஆலை உரிமையாளர்களின் பெயரில் சேமிப்பு வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்து ஆலைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 1980 ஆண்டில் அமைத்திருந்த ஆலை அபிவிருத்தி நிதியத்திற்காக 2021 திசெம்பர் 31 வரை கிடைத்த செஸ் வருமானம் மற்றும் வங்கி வட்டி வருமானம் கூட்டுத் தொகை திரண்ட நிதிய கணக்கின் மீதி ரூபா 99,813,314 தொகையும், வங்கி வைப்புக்களில் பெறுமதி ரூபா 208,494,784 தொகையுமான | இந் நிதியை ஆலை அபிவிருத்தி தொடர்பாக ஈடுபடுத்த உரிய வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த எதிர்காலத்தில் விசேட கவனம் செலுத்துவதாக அறிவிக்கிறேன். | நிதிய செயற்பாடுகளை வினைத்திறனாக்கி ஆலைகளை அபிவிருத்தி செய்ய உரிய வேலைத் திட்டமொன்றுடன் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதும் மீளாய்வாண்டினுள் 04 ஆலைகளை நவீனமயமாக்க வழங்கியிருந்த நிதியை திரண்ட நிதியத்தின் 3 சதவீதமான ரூபா 3,216,952 தொகை மாத்திரமானதில் ஆலை அபிவிருத்தி தொடர்பாக சரியான வேலைத் திட்டமொன்று இல்லையென அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 1971 இலக்கம் 46 கொண்ட தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் அதிகாரம் பிரகாரம் தேங்காய் எண்ணெய்யை பாரிய அளவில் கொள்வனவு செய்து விலை ஏற்ற இறக்க பிரகாரம் சந்தைக்கு விநியோகிப்பதன் மூலம் விலையை கட்டுப்படுத்தும் நோக்கில் தேங்காய் எண்ணெய் விலை உறுதிப்பாட்டு நிதியம் உருவாக்கப்பட்டிருந்த போதும், 1981 ஆண்டு முதல் இந் நிகழ்சித் திட்டத்தை அதிகார சபையினால் கைவிட்டு அதற்காக துறைமுகத்தில் அமைத்திருந்து எண்ணெய் தாங்கியையும் வேறொறு நிறுவனத்திற்கு வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், 1985 ஆண்டு முதல் நிலுவையாக உள்ள ரூபா 78,865,954 ஆன கடன் தொகையொன்று உள்ளடங்களாக கூட்டுத் தொகை ரூபா 160,885,535 அறவிட வேண்டிய கடன் மீதியொன்றும், ரூபா 232,281,453 ஆன முதலீட்டு மீதியொன்று மற்றும் ரூபா 334,956,888 ஆன திரண்ட நிதி மீதியொன்றுடனும் மீளாய்வாண்டு வரையும் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரித்து காணப்பட்டது. | தேங்காய் எண்ணெய் விலை உறுதிப்பாட்டு நிதிய கணக்கும் மீண்டும் மீளாய்வு செய்து எதிர்வரும் திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | தேங்காய் எண்ணெய் விலை உறுதிப்பாட்டு நிதியத்தை மீண்டும் அமைப்பது தொடர்பாக கவனம் செலத்த வேண்டும். |

### 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | ஏற்கனவே திட்டமிட்ட செயலல்லாத தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் நாரஹேன்பிட்ட பிரதாக அலுவலகம் முன்னாக அடி 12 x 9 அளவில் P5 அளவின் கீழ் LED டிஜிடல் திரையொன்றை இஸ்தாபிக்கும் ஒப்பந்த அளவுத்திட்டத்தை பூர்த்தி செய்து ரூபா 5,196,879 ஆன குறைந்தபட்ச விலை சமர்பித்திருந்த நிறுவனத்திற்கு ஒப்படைக்க தொழிநுட்ப ஆய்வுக் குழுவின் பரிந்துரையின் மீது பெறுகைகள் குழுவினால் அங்கீகரித்திருக்கையில் ஈ அஞ்சலில் பின்னர் பெற்றுக் கொண்ட ரூபா 6,183,000 ஆன அதிக விலைபட்ச விலை சமர்பித்திருந்த நிறுவனத்திலிருந்து மீள் | குறித்த அளவுத்திட்டத்திற்கு இணங்க சரியான நியமத்தின் தரத்துடனான உபகரணமா என தொழிநுட்ப அறிவுடன் கூடிய வெளி நபரொருவரின் மூலம் மீண்டுமொறு முறை பரிசோதித்த பின்னர் முன்நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவ்வாறு இல்லை எனின் முற்பணத்தை மீள்அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும | பெறுகைகள் செயன்முறை தொடர்பாக சுயாதீனமான பரிசோதனையொன்றை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விசாரித்து ரூபா 4,998,000 தொகைக்கு ஒழுங்கான உடன்படிக்கை இன்றி மற்றும் செயலாற்றுகை பிணைமுறி ரூபா 249,900 இனால் குறைத்து பெற்றுக் கொண்டு செயற்பாட்டை ஒப்படைத்து அதற்காக ரூபா 999,600 செலுத்தப்பட்டிருந்தது. தயாரித்திருந்த திரை உரிய அளவிலான ஒன்று என உறுதிப்படுத்தி இருக்காமை, ஒவ்வொரு இடங்களிலும் பழுதடைந்து சட்டகம் வலைத்துள்ளமை மற்றும் திரையை செயற்படுத்தும் கட்டுப்பாட்டு அலகு பழையயொன்றானமை போன்ற பிரச்சினைகள் காரணமாக அது புதிய தன்மையிலான ஒன்றென உறுதியாகாததுடன் இது 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக்கு இணங்காத சர்ச்சைகுறியதான பெறுகையொன்று என அவதானிக்கப்பட்டது. | அறிவிக்கிறேன். | |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஏற்பாடு ஒதுக்கியிருக்காத போது மற்றும் தேவைப்பாடு இல்லாத போது 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்காத வகையில் மற்றும் சிககனமற்ற வகையில் இலத்திரனியல் முகவரிக்கு விலை மணு பெறப்பட்டு நாரஹேன்பிட்ட பிரதான அலுவலகத்தின் தவிசாளர் அறைக்கு ரூபா 1,314,890 செலவில் தொலைக் காட்டிசி இயந்திரமொன்று, APPLE I PAD PRO 12.9” 256 GB உபகரணமொன்று மற்றும் 758 L பொட்டல் கூலர் ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | தவிசாளரின் கடமை செயற்பாடுகளிற்காக அத்தியவசியமானதால் செயலாற்றுகை பிணைமுறி பெற்றுக் கொள்ளாது விரைவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் நிலவிய கொரோனா தொற்று நிலைமை காரணமாக இலத்திரனியல் அஞ்சல் மூலம் விலைகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிகளை பின்பற்றி பெறுகைகள் மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | கணனி மற்றும் உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்ய பெறுகைகள் திட்டத்தில் ஒதுக்கிய தொகை ரூபா 3,154,000 ஆன போதும், அதனை விட ரூபா 1,431,150 தொகை கூடுதலாக செலுத்தி ரூபா 4,585,150 இற்கு 13 கணனிகள், அச்சு இயந்திரம் மற்றும் 13 மடிக் கணனி (லெப் டொப்) கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 13 மடிக் கணனிகளை கொள்வனவு செய்ய பெறுகைகள் குழுவிற்கு சமர்பிக்காது அதிகார சபையின் தவிசாளரின் அங்கீகாரத்தின் மீது விலைமணு கோரலில் இருந்து கட்டளை இடும் வரை அனைத்து பெறுகைகள் செயற்பாடுகளும் ஒரே தினத்தில் மேற்கொண்டு செயலாற்றுகை பிணைமுறியொன்றைறும் பெற்றுக் கொள்ளாது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது | எதிர்காலத்தில் மேலதிக கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில் பெறுகைகள் திட்டத்தை திருத்த வேண்டுமென குறித்த அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. உதிரிப்பாகங்களை பெற்றுக் கொள்வதன் மீதான கடினம் மற்றும் விலைகள் கூடுதலாக உள்ளமையை கவனத்திற் கொண்டு இவ் வகையிலான கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. | பெறுகைகள் வழிகாட்டிகளை பின்பற்றி பெறுகைகள் மேற்கொள்ள வேண்டும். |

**3.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கழிவு நீர் பரிசோதனை, திசிந்தி தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட தெங்கு உற்பத்தியினல் கனலோகம், கழிவுப் பொருள் மற்றும் போசக்ன ஆகிய தரம் பற்றி பரிசோதிக்க அதிகார சபையினால் 2018 – 2020 வருட காலத்தினுள் ரூபா 35,057,502 இற்கு கொள்வனவு செய்திருந்த 23 பரிசோதனை உபகரணங்கள் மற்றும் பொருட்கள் 2021 ஆண்டிறுதி வரையும் பயன்படுத்தாது இருப்பதாக அவதானிக்கப்பட்டன. அதன் காரணமாக தெங்கு உற்பத்திகள் நியமத்திற்கு இணங்க தரத்துடன் மேற்கொள்வதாக உறுதிப்படுத்தும் பொறுப்பை நிறைவேற்ற முடியாதிருந்ததுடன் அதிகார சபைக்கு வருமானமும் இழக்கப்பட்டிருந்தது. | 2015 ஆண்டில் வெள்ளத்திற்குட்பட்டமை, 2017 ஆண்டில் இரசாயனகூட நவீனமயமாககல் செயற்பாடுகள் 2019 ஆண்டு வரை நிலவியதால் 2019 – 2021 காலப்பகுதியினுள் 62 சதவீத ஊழியர் வெற்றிடமாதல், கொவிட் தொற்று காலப்பகுதியினுள் தேவையான வாயுக்களை இறக்குமதி மற்றும் கொள்வனவு செய்ய முடியாமை, சில பீடைகொல்லி வகைகளை மற்றும் சில உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்தலை தடை செய்தமை, பரிசோதனைக்காக முன்வைக்கப்படும் மாதிரிகள் அளவு குறைவடைந்தமை போன்ற காரணத்தால் உபகரணங்களை செயற்படுத்த முடியாதிருப்பதாக. | இயந்திர உபகரணங்களை எதிர்பார்த்த செயற்பாடுகளிற்கு பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | அதிகார சபைக்கு சொந்தமான 04 மாடிகளுடன் கூடிய 17,866 வர்க்க அடியுடனான கொழுப்பு கோட்டை அலுவலகத்தில் 7,754 வர்க்க அடியுடன் கூடிய் முதலாம் மாடி மற்றும் மூன்றாம் மாடிகளை 2018 ஏப்ரல் மாதம் முதல் மாற்று பாவணையின்றி காணப்பட்டன. | தெங்கு சார்ந்த கைத்தொழிலுடன் கூடிய வர்த்தக கண்காட்சிக் கூடமொன்றை இஸ்தாபிக்க திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த அங்கீகாரத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | கட்டிடங்களிலிருந்து சரியான பயன்பாட்டை பெற்று வினைத்திறனா பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2014 ஆண்டிற்கும் முன்னரிலிருந்து 2020 ஆண்டு வரையான காலத்தினுள் கொள்வனவு செய்யப்பட்ட 33 வகைகளுக்குரிய ரூபா 914,270 பெறுமதியான இரசாயன பொருட்களின் இருப்புக்கள் பயன்படுத்தாது காணப்பட்டதுடன் அதற்கான காரணம் முன்வைக்கப்படவில்லை. | கொவிட் நோய் நிலைமை, எரிபொருள் நெருக்கடி மற்றும் மின்சார தடைப்படல் காரணமாக நாடு செயலிழந்ததால் பரிசோதனைக்கு முன்வைக்கப்படும் மாதிரி அளவுகளும் குறைவடைந்ததால் இரசாயன பொருட்கள் செலவாவதும் குறைவடைத்துள்ளன. | காலாவதியாக முன்னர் இரசாய பொருட்களை பயன்படுத்த வேண்டும். மேலதிக இருப்பு சேகரிக்கக் கூடாது. |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் 2021 திசெம்பர் 31 திகதியன்று 259 ஆன அங்கீகார ஆளணியில் 20 சதவீதமான 52 பதவிகள் பல வருடகாலமாக வெற்றிடமாக காணப்பட்டதுடன் பணிப்பாளர் (நிர்வாகம்) மற்றும் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல் மற்றும் சர்வதேச) ஆகிய உயர் முகாமைத்துவ பதவிகள் 02 அதனுள் ஆனது. தேவைக்கேட்ப அப்பதவிகளை நிரப்பிக் கொள்ள அல்லது அங்கீகார பதவிகளை திருத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சேவையிலிருந்து கேட்டு விலகுதல்/ஓய்வு பெறும் காரணத்தால் வருடாந்தம் கவனிக்கத்தக்க பதவிகள் வெற்றிடமாகின்றன. 2019.09.27 திகதி வெற்றிடமாகியுள்ள பணிப்பாளர் (நிர்வாகம்) பதவி ஆட்சேர்ப்பு திட்டங்களின் படிவங்கள் திருத்துவதற்காக அனுப்பப்பட்டுள்ளது. பணிப்பாளர் - சந்தைப்படுத்தல் (சர்வதேச) பதவியின் தேவைப்பாட்டை மேலும் கலந்துரையாடி கவனத்திற் கொள்ள பணிப்பாளர் சபை தீர்மானத்தை வழங்கியுள்ளது. | வெற்றிடங்களை நிரப்ப அல்லது அங்கீகார பதவி எண்ணிக்கையை திருத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |